# கிறீஷாமிர்தம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஷாமிர்தம்

பதிப்பாசிரியர்

கௌரிகாந்தன் கலாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: கிறீஷாமிர்தம்

பதிப்பாசிரியர்: கௌரிகாந்தன் கலாதேவி

முதற் பதிப்பு : மார்கழி 2020

வெளியீடு : கோகுலம், ஏழாலைமேற்கு, ஏழாலை

அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி

பக்கம் : 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அன்னையின்
மடியில்
13
08
1979



ஆண்டவன்
அடியில்
16
11
2020

திதி வெண்பா

சார்வாரி ஆண்டின் சுபதின நன்நாளின்
பார்புகழ் சுக்கில தேர்துதிகை சீர்திகழ்
நேர்கௌரி காந்தன் கிரிசா எய்தினார்
பேர்விளங்கு வைகுண்டம் இனிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சோற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை

## தேவாரம்

தொண்டரஞ்சு களிறும்
அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு
செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால
மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல
மொட்டலருங் கேதாரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருகிப் பொழுதினைச் சுருக்கும்
புழுதலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்களுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கறபகக் கணியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முக அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியிற் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்பு வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் யான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடுகின்றபோது உன் திருவடிக்கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

## திருச்சிற்றம்பலம்

## தேற்றம்

பூ மலர்ந்து சருகாவதும் பூரணை தான் தேய்வதுவும்
பாமாலை இசைத்திடும் பக்தர்களும்! பூமாலை போல்
வாடியொரு நாள்தனில் வனப்பிழந்து மடிவருண்மை
தேடிடாது மானுடனே ! தேறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

இருள் தொடுக்கும் கருமேனி இருவிழிகள் தாமரைப்பூ
அருள் கொடுக்கும் வலக்கையும் அழகான தாமரைப்பூ
பொருள் விடுக்கும் செவ்வாயும் பொன்னடியும் தாமரைப்பூ
இருள் கொடுக்க இருப்பதுவோர் திருவல்லிக்கேணியிலே

பேயாழ்வார் பிறந்த பெரும்பதி இதனிலே
நீ எழுந்தருளினை நாராயணா
உன்னை நித்தமும் போற்றுகின்றோம் நாராயணா
நாராயணா நாராயணா நாராயணா நாராயணா

தாயாக உலகத்தை தாங்க வந்தாய் கண்ணா
தாயாக உலகத்தை தாங்க வந்தாய் கண்ணா
வாயுள்ளே உலகத்தை வைத்தாயே மணிவண்ணா
நாராயணா நமோநாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா

காயாய் மலர் நிறத்தோய்
கதிர் மதியும் போல் முகத்தோய்
கையிலுள்ள சக்கரத்தால் காசினியை
சுழற்றிடுவோய் ஹா... ஹா...
ஆயனாய் குழல் ஊதி ஆ.... ஆ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு செய்யும் ஆச்சியரை அலக்கழித்தே எய்திடுவாய்.
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா

பார் அதிரும் போர் தடுக்க பஞ்சவர்க்குத் தூது சென்றிடுவாய்
பாரதப் போர் மூண்டபின்னே பார்த்தனுக்கு துணை நின்றாய்
ஆ...ஆ...
சோர்தற்குவில்லை எடு துக்ஷ்டரை அழித்துவிடு என்று
சாரதியாய்த் தேர் ஓட்டி
பார்த்தசாரதியாய்த் தேர் ஓட்டி
கீதை ஒரை தந்தாயே

நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா

வேதப் பொருளே எம் வேதனைகள் தீர்த்திடுவாய்
பாதம் பணிந்து பல்லாண்டு பாடுகின்றோம்
நாதனே நரசிங்கா நம்பிரான் கோவிந்தா
நாராயணா ஹரி நாராயணா
நாராயணா ஹரி நாராயணா
நாராயணா ஹரி நாராயணா
நாராயணா ஹரி நாராயணா

நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

சீயும் குருதிச் செழுநீர் வழும்பும் செறிந்தெழுந்து
பாயும் புடவை ஒன்றில்லாத போது பகல் இரவாய்
ஈயும் எறும்பும் புகுகின்ற யோனிக்கு இரவுபகல்
மாயும் மனிதரை மாயாமல் வைக்கமருந்தில்லையே !

## அம்பாள் துதி

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரஎரி செய்தோன் புறம் இருக்கும் பரமெஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பி னவர் கைவிளக்கே ளாவேஸ்வரி
கவளை களைத் தீர்த்து விடும் காளீஸ்வரி
கார் இருளில் தீச்சுடரே ஜோதிஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உள்ளடிமைச் சிறியோனை நீ ஆதரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராம பிரானின் பதினாறு பண்புகள்

வால்மீகி ராமாயணத்தின் முதலாவது ஸர்க்கம் (முதல் - பிரிவுகள்) சம் செப ராமாயணம் எனப்படும். இந்தப் பகுதியில் வால்மிகி மகரிஷி ராமாயணக் கதையின் முழு வரலாற்றையும் சுருக்கமாக அளித்துள்ளார். இதில் "பதினாறு குணங்களைப் பெற்றவனே பூரணமான மனிதனாவான்" என்று வால்மிகி வலியுயுறுத்திக் கூறுகிறார். பூரண மனிதப் பண்புகள் படைத்தவனின் வரலாற்றை, தான் காவியமாக்க விரும்புவதாக வால்மீகி, நாரத முனிவரிடம் கூறுகிறார்.

வால்மீகி மகரிஷி கூறிய அந்தப் பண்புகள் வருமாறு.

**1. குணவான்:** - நற்பண்புகள் உடையவானக இருக்க வேண்டும்.

**2. வீர்ய வான்:** -நல்ல பண்புகளோடு இருந்தால் மட்டும் போதாது எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் இருக்க வேண்டும்.

**3. தர்ம மஜ்ஞன்:** - தர்மத்தை அறிந்தவனாக இருக்க வேண்டும்.

தன்னிடம் ஆற்றல் இருக்கிறது என்பதற்காக எதை வேண்டு மானாலும் உப்படி வேண்டுமானலும் செய்து விடக் கூடாது. தர்மத்தின் வகையிறந்து செயல்பட வேண்டும். தர்மத்தின் படி நடக்க வேண்டும். தர்மத்தின் தெளிவு சுளிவுகளை அறிந்திருக்க வேண்டும்.

சில இடங்களில், சில நேரங்களில் விசேஷதர்மத்திற்காகச் சாமான்ய தர்மத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்.

*அடுத்தவரை துன்புறுத்தக் கூடாது என்பது சாமான்ய தர்மம்.* கொடிய குற்றவாளியைத் துய்புறுத்தி தண்டிக்கலாம் என்பது மன்னர்களின் விசேஷதர்மம். இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப தர்மத்தைக் கடைப்பிடிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. க்ரு தக்ஞன்:-** நன்றி அறிந்தவனாக இருக்க வேண்டும்.

படகோட்டி, பறவை ஜடாயுவிடம் நன்றி என்றெல்லாம் சிறிய உதவி செய்தவர்களிடமும் நன்றி பாராட்டியது ராமனின் திவுள்ளம். ஏன் சிறு அணிலுக்கும் கூட நன்றி காட்டி அருள் செய்தவன் ராமன்.

**5. சத்திய வாக்கு: -** உண்மையான வாக்கு உள்ளவன். சொன்ன சொல் தவவறாதவன். எப்பாடுபட்டாவது வாக்குறுதிகள் நிறைவேற்ற வேண்டும் என்பது கருத்து.

**6. த்ருட விரதன்: -** தான் மேற்கொண்ட விரதத்தில் உறுதிப்பாடு உடையவன். தந்தை சொல் தட்டாமல் நடத்தல் போன்ற கொள்கையிலும் ஏக பத்தினி விரதம் என்ற கொள்கையிலும் உறுதியுடன் இருந்தவன் இராமன்.

**7. சாரித்ரேண :-** நல்ல நடத்தையுள்ளவன். நல்ல நடத்தையே சரித்திரம் அல்லது வரலாறு என்று போற்றப்படும்.

**08. சர்வ பூதஹிதன்: -** எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்பவன். மனிதர், தேவர், முனிவர், கழுகு, கரடி, குரங்கு போன்ற எல்லா உயிரினங்களிடமும் அன்பு இனியவே செய்பவன்.

**09. வித்வான்:-** வித்வத்(புலமை) உள்ளவன். பலவகை வித்தைகளையும் வசிஷ்டர் முதலான குருமார்களிடம் கற்றுத் தேர்ந்தவன் ராமன்.

**10. சமர்த்தன்: -** சாமார்த்தியசாலியாகவும் இருப்பவன். புலமை மட்டும் இருந்தால் போதாது. புலமையைச் சரியான முறையில் பயன்படுத்தும் திறமையும், உலகியல் அறிவும் வேண்டும்.

ஒரு செல்வந்தர் பெரிய மாளிகை கட்டி குடியேறினார். அவர் கிரகப் பிரவேசத்திற்கு ஒரு புலவரையும் அழைத்திருந்தார்.

மாளிகையைச் சுற்றிப் பார்த்த புலவர், "வீடு திர்வம்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது" என்றார். அது உண்மையிலே ஒரு பாரட்டு வார்த்தை தான! ஆனால் உரியபடி சொல்லும் சாமார்த்தியம் அவரிடம் இல்லை!

"வம்சம் என்ற சொல்லுக்கு "மூங்கில்" என்றும் ஒரு பொருள் உண்டு. "மாளிகை எங்கும் கட்டப்பட்டுள்ளது" என்பதையே சாமார்த்தியம் இல்லாத அந்த வித்துவான் "நிர்வம்சம் (வம்சவிருத்தி அற்ற வீடு)" என்ற அமங்கலமான சொல்லாமல் கூறி விட்டார்.

**11. பிரிய தர்சனன்:** - காட்சிக்கு இனியவன். எளிதில் மார்க்கம் கூடியவனாகவும் இனிய தோற்றம் உடையவனாகவும் இருக்க வேண்டும்.

**12. ஆத்மவான்:** - தன்னை உணர்ந்தவன். இங்கு ஆத்ம ஞானம் என்ற பொருளுடன் தனது திறமைகளையும் ஆற்றல்களையும் உணர்ந்து அறியும் திறமை பெற்றவன் என்ற பொருளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**13. ஜிதக்கு ரோத :** - கோபத்தை வென்றவனுக்கு புறப்பகைவர் களை வெல்வது எளிது. ராமன் காடேக வேண்டிய சூழ்நிலையிலும் சினம் கொள்ளாமல் மலர்ந்த முகத்துடன் இருந்தான். வெருண்டெழுந்த லட்சுமணனின் கோபத்தைத் தணித்தான்.

**14. த்யுதிமான்:** - காந்தி(மேனி ஒளி) படைத்தவன். "தன் மேனி ஒளியில் சூரியன் ஒளியையும் மழுங்கச் செய்தவன் ராமன்" என்று கவிச் சக்கரவர்த்தி கம்பன் வர்ணித்திருந்தான்.

**15. அநசூயக:**- பொறாமை இல்லாதவன். "அசூயை" என்றால் பொறமை. அத்திரி முனிவரின் மனைவிக்கு அநசூயை((பொறமை அற்றவள்) என்றே பெயர் அமைந்திருந்தது.

**16. (பிப்யதி தேவாஸ்ச ஜாதரேஷஸ்ய ஸம்யுகே) ஆக்ரோஷ:** - அமரர் நடுங்கும் ஆக்ரோஷம். இனிய சுபாவம் உள்ளவன் என்பதால் எவரும் எளிதாக எடை போட்டு விடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளின் சுருதியிலிருந்து

கிறீஷா அப்படியே உன்னைப் போல தான் இருக்கிறாள், அண்ணனும் தங்கச்சியும் எண்டு சொல்லவே தேவையேயில்லை" இது தான் என்னுடைய கிறீஷாவுடனான ஞாபகங்களின் தொடக்கம்.
எண்பதுகளில் நாங்கள் ஏழாலைக்கு இடம்பெயர்ந்து வந்த பிறகு நாயிற்றி காட்டில் அப்பப்பா வீட்டில் நான் செய்த அத்தனை (வீரதீர) செயல்களிலும் அவள் இருப்பாள். அந்தக்காலங்களில் நான் சொல்வதை கண்ணை மூடிக்கொண்டு செய்பவர்களில் அவளும் ஒருத்தி. அப்படி இன்னும் நிழலாடும் சில நினைவலைகளில் இருந்து...

**உயரப்பாய்ச்சல்**

விளையாட்டு விதி: அப்பப்பா வீட்டு மொட்டை மாடியில் ஒரு கிருஷ்ணர் சிலையிருக்கும். அந்த சிலைக்கருகில் இருந்து கீழே குதிப்பது. கீழே வெறும் மண் தரைதான். உயரம் ஒரு பதினைந்தடி யிருக்கும். நான் இந்த விளையாட்டை விளக்கியவுடன் உடனேயே எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லாமல் செயல்படுத்தியது கிறீஷா தான். அவள் முதலில் குதித்து தனக்கு ஒன்றும் ஆகவில்லை என்று உறுதி மொழி அளித்த பிறகுதான் மற்றவர்கள் குதித்தார்கள் நான் உட்பட.

**பி.கு :**

இந்த வீரவிளையாட்டு எனது மைத்துனன் கையையும் பதம் பார்த்தது.

**மறக்கமுடியாத ஒன்று கள்ள மாங்காய் :**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காயுடன் உப்பும் மிளகாய்த்தூளும் கலந்த அந்த அருஞ் சுவையை எனக்கு அறிமுகப்படுத்தியது கிறீஷா தான். அதே அப்பப்பா வீட்டு வளவில் நிறைய மாமரங்கள் இருந்தன. அத்தனை மாமரங்களில் இருக்கும் மாங்காய்கள் எல்லாம் கணக்கெடுக்கப் படிருக்கும் அதில் ஒன்று இரண்டை திருடுவது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. இருந்தாலும் எப்பிடியாவது என்னுடைய மாங்காய் ஆசையை தீர்த்து வைப்பதற்காக வீட்டு கூரையில் ஒளித்திருந்த கணக்கில் வராத மாங்காய்களை எந்தவித பயமும் இல்லாமல் ஏறி பறித்துக்கொண்டு வருவாள் கிறீஷா. அதை மொட்டை மாடியில் ஒளிந்திருந்து உப்பும் மிளகாய்த்தூளும் கலந்து சாப்பிட்ட அந்த சுவையும் , நினைவுகளும் இன்னும் மறப்பதற்கில்லை.

பொழுதுபோக்கு:

உள்நாட்டு , வெளிநாட்டு முத்திரைகளை சேகரிப்பது இந்தக்காலத்தில் அற்றுப்போன அந்தக்கால பொழுதுபோக்குகளில் ஒன்று. என்னுடைய இந்த புது பொழுதுபோக்கை கிறீஷாவுக்கு சொன்ன வுடன் அவளுக்கு வந்த யோசனை தான் இது. அப்பப்பா வீட்டு வளவில் சம்பந்தமில்லாமல் ஒரு மூலையில் ஒரு சிறிய கட்டிடம் இருக்கும். ஒளிச்சிப்பிடிச்சு விளையாடும் பொழுது அதன்பின்னால் போய் ஒளித்துக்கொள்வதுடன் சரி. அதனுள் என்ன இருக்கின்ற தென்பதை நான் அறிய முயல்வதில்லை. ஆனால் அந்த கட்டிடத் துக்குள் பழைய கடிதங்கள், பத்திரங்கள் இருப்பதாகவும் அதில் பழைய முத்திரைகளை தான் கண்டதாகவும் அத்துடன் அந்த கட்டிடத்திற்குள் நுழைய ஒருவருக்கும் அனுமதி இல்லை என்றும் கூறினாள் தங்கை. பின்னர் அவளே அந்த கட்டிடத்தின் சாவியை கண்டுபிடித்து தந்தாள். அங்கிருந்த பழைய முத்திரைகள் எல்லாம் கிழித்து எடுத்து எனது முத்திரை சேகரிப்பை இரண்டு மடங் காக்கினாள். இதை கண்டுபிடித்த எங்கள் பெரியப்பா எங்கள் இருவரையும் ஒரு வழிபண்ணிவிட்டார். இந்த தண்டனையை எனக்காக எந்தவித தயக்கமும் இன்றி ஏற்றுக்கொண்டது மட்டு மில்லாமல் என்னுடைய அடுத்தடுத்த பொழுதுபோக்குகளான கோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பு, படம்வரைதால் என்று எல்லாவற்றிலும் பங்குகொண்டாள்.

**எம் வழி நேர் வழி**

அப்பப்பா வீட்டிலிருந்து கிறீஷா வீட்டுக்கு செல்லும் ஒரு வழி இருந்தது. அதனுடன் இன்னுமொரு குறுக்கு வழியுமிருந்தது தான் எங்கள் பிரச்சனை. இவ்வளவு மெனைக்கெட்டு தார் போட்ட ஒரு நேர்வழி இருக்கும் பொழுது இந்த குறுக்கு வழி எதற்கு? குறுக்கு வழியை தடுத்து அந்த நேர்வழியை எப்படியாவது உபயோகப்படுத்த பட வைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இந்த எண்ணத்தை உடனேயே செயல்படுத்த முடிவெடுத்து பக்கத்தில் இருந்த பற்றையில் இருந்த முள் தடிகளையும் கற்களையும் போட்டு அந்த குறுக்கு வழியை அடைப்பதற்கு என்னுடன் தோளாடு தோள் நின்ற தோழியும் அவள்தான்.

இப்படி தங்கை கிறீஷாவுடனான எனது இளமைக்கால நினைவுகள் ஏராளம். அவள் இப்பொழுது எங்களை விட்டு பிரிந்துவிட்டாலும் இந்த ஞாபகங்கள் எப்பொழுதும் என்னுடன் வாழும்.

– உ. ஜெயகனேஷ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் குலக்கொடி மறைந்தாள்
## நான் விழிகளை இழந்தேன்

ரகுகுலக்கருமணி காவல் கொண்டவள்
யதுகுலக்கண்ணனின் சரணம் பணிந்தவள்
பெண் குலக் கண்மணி என்மடி தவழ்ந்தவள்
கண்மலர் மூடிக் காரிருள் தந்ததேன்?

பெற்றோரைப் பக்தி கொண்டு பூசித்தவள்
உற்றாரை உண்மையாக நேசித்தவள்
கற்றோரின் கருத்துக்களை வாசித்தவள்
நற்பண்புமிக்க நட்பை மட்டும் சுவாசித்தவள் - இன்று
பற்றறுத்து பகவான் பதம் யாசித்ததேன்?

பரிவு, பாசம் , பக்குவம் உன் மூச்சானது
அறிவு, ஆற்றல், ஆளுமை உன் பேச்சானது
துணிவு, தர்மம், நேர்மை உன்னில் நிறைவானது
தெளிவு, திருப்தி, திறமை என்றும் குறையாதது
பணிவு, பக்தி பொறுமை உன்னுள் உறைவானது

லக்கி ப்றௌவுனி உன்தன் கையில் செல்லமானது
லஷ்மி குட்டி உனது வீட்டின் செல்வமானது
அன்னை, தந்தை உன் மனதில் தெய்வமானவர்
என்றிருந்த பெருமை இன்று பொய்மையானது
முன் வகுத்த விதிவழி தான் உண்மையானது

மடல் அனுப்பி மாயவன்தான் உனை அழைத்தானோ - என்
கடல் போன்ற கண்ணீரில்தான் நீ குளித்தாயே உன்
உடல் சுமந்த ஊர்தியிலே அவன் நாமம் ஒலித்திருக்க
விடை கொண்டு சென்றாயே வைகுண்டம் கண்டாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி ஏது வசந்த:ம்

கதை பேசும் உன் விழிகள்
மூடிக்கொண்ட கணப்பொழுதில்,
எம் இதயங்கள் மட்டுமல்ல
இல்லங்களும் இருள் கண்டதே.
சதை கொண்ட உடல் வேறாய் ஆனபோதும்
உயிரொன்றாய் உறவாடி வாழ்ந்திருந்தோமே - இன்று
சிதை கொண்டு நீ மறைந்து நீறாகிப் போனாலும்
சிலை கொண்ட தெய்வமாக நெஞ்சத்தில் நிலைத்திருப்பாய்.

என் உடன்பிறவா சோதரியே !
உலகுணர்ந்த பேரறிவே!
உன் பிரபு கொண்ட பண்புகளை
பரிந்துரைத்த பக்குவமே!
நின் தெளிந்த சிந்தையும் ஞானமும் கண்டு
வியந்து போற்றி பெருமை கொண்ட போதினிலே
விண்ணழைத்து விரைந்ததேன்?
வேதனையை பிழிந்ததேன்?

பொலிவான உன் தோற்றம், மாறாத புன்சிரிப்பு
புறத்தாரைக் கவர்ந்திழுக்கும் கனிவான உன் பேச்சும்,
கிலிகொண்ட கொடு நோயால்,
கட்டவிழ்ந்து போகவில்லை. - ஆனாலும்
கலிகொண்ட யுகம் கண்ட தீயவற்றை,
கனவிலுமே காணமறுத்தாய். - அதனால்
வலிகொண்ட விதி வகுத்த வழிகண்டு,
வானுலகு சென்று விட்டாய், நம் வசந்தத்தை கொன்று விட்டாய்.

பெற்றவளை மறந்து நீயும் பறந்தோடி சென்றாயோ?
சுற்றமதை துறந்து அங்கு சுவர்க்க வாயில் அடைந்தாயோ?
பொய்யான உடல் நீத்து,
புனிதவதியாகி நின்று,,
வையகம் தனை வெறுத்து வைகுந்தம் புகுந்தாயோ?

அன்பான அக்கா
– இ.காயத்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாயோ
# எங்கள் குலக் கொழுந்தே

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு ஆவணி மாதம் பதின்மூன்றாம் நாள்! இந்தப் பூமியைக் காண நீ அவசரப்பட்ட அந்த நாள். ஏழு மாதத்தில் பெண் குழந்தை பிரசவமாகி யுள்ளது. பாதி பயம், பாதி மகிழ்ச்சி. எப்படியோ கண்ணாடிப் பேழையினுள் கவனமாக நீ வளர்ந்து வீடு வந்து சேர்ந்த போது எல்லோருமே குதூகலமாகிக் கொண்டாடி மகிழ்ந்தோம். என்னவோ தெரியாது காயத்ரி கிறீஷாவை தம்பி என்று தான் அழைத்தாள். அப்போது அவளுக்கு ஒரு வயது. அதேபோல் கிறீஷா ஒரு ஆண் பிள்ளைக்குரிய வல்லமையோடு செயற்பட்டாள். பிற்காலத்தில் அவள் எங்கள் எல்லோரையும் தாங்கிக் கொள்வாள் என்றுதான் இறுமாந்திருந்தோம். இன்று எல்லாம் கானலாகிப் போனது எதனால்? புவனேஸ்வரி அம்பாளின் பாதங்களில் அர்ப்பணித்து "புவனகிறீஷா" என பெயரிட்டு அழைத்து மகிழ்ந்திருந்தோம். அவள் வளர்ந்து பிறகு தனது பெயர் கொஞ்சம் பெரிதாகிப் போய்விட்டது. அம்மா நினைந்திருந்தது போல் "லதாங்கி" என்ற பெயரையே சூட்டி இருக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டாலும், அம்பாளின் நாமத்தை மாற்றமுடியாது என்று திருப்திப்பட்டுக் கொண்டாள்.

இரவு, பகல் கண்விழித்து குழந்தையை கவனமாக ஆரோக்கியமாக வளர்த்துவிட்டாள் எங்கள் சகோதரி. அவள் எல்லோருக்குமே மிகமிகச் செல்லம். அப்பப்பாவின் மடியிலே அதிகம் தவழ்ந்தவள். அவர் "கண்ணழகி" என்று பெருமையாகவும் செல்லமாகவும் அழைப்பார். தாத்தா "சுட்டி, சுட்டி" என்று அழைப்பார். யாருக்கு பிடிக்குமோ இல்லையோ அவளுக்கு பிடித்த உணவுதான் அம்மம்மாவின் சமையலில் இருக்கும். இறுதி காலத்தில் அவள் நோயுற்ற போதில் உணவில் அதிகம் நாட்டம் இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தருணத்தில் அம்மம்மாவின் சமையல் பற்றி கூறி ஏங்கி இருக்கிறாள். அப்பப்பா வீட்டில் இருந்த போது அந்த பிருந்தாவனத்து நந்தவனத்தில் அவளது பெரிய அத்தை தூக்கிக் கொண்டு உலாவுவாராம். அப்போது அவள் வாயில் இருந்து வந்த முதல் வார்த்தை பூ என்பதே. அதே போல அவளும் ஒரு பூவாக, பூவைப் போல உள்ளத்தோடு வாழ்ந்திருந்தாள். பதினொரு வயதிலே பூவையானவள் ஒரு வசந்த காலப் பறவை போலவே சிட்டாகப் பறந்து வண்ணாத்திப்பூச்சியாக இருந்து, மான் குட்டியாய் துள்ளித் திரிந்தாள். ஆனாலும் தன்னருமை அப்பாவை இழந்தபின் வாழ்க்கை ஏற்ற இறக்கமானது என்பதை உணர்ந்து கொஞ்சம் தளர்ந்துதான் போனாள். அதன் பின், ஏமாற்றங்கள், போராட்டங்கள், சலிப்புகள் வந்தாலும் சந்தோசமாகத் தாங்கிக் கொண்டு அம்மாவையும் தாங்கிக் கொண்டாள். அம்மாவுக்கு நோய் வந்து சிகிச்சை பெற்ற போது ஒரு தாயாக, தாதியாக செயற்பட்டது கண்டு எங்களுக்கு வியப்பாக மட்டுமல்ல பெருமையாகவும் இருந்தது. அவள் தாய் மீது கொண்ட பிரியம் அளவிடக்கரியது. அம்மாதான் அவள் மூச்சு, பேச்சு எல்லாமே. அதேபோல எல்லோரிடமும் உண்மையாகவே நேசம் கொண்டிருந்தாள்.

மனிதர்களை விட பிறஉயிர்கள், வாயில்லா ஜீவராசிகளின் மீது அதிக அனுதாபம் கொண்டவள். அவள் இறுதி வரை நேசித்த அவளது செல்லப் பிராணி "லக்கி" இன்னும் அவளைத் தேடி ஏங்குவதை தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. எந்த வாகனம் வீட்டு வாசலுக்கு வந்தாலும் அக்காதான் வருகின்றாளோ என்று ஓடிப் போய் பார்த்து ஏமாந்து திரும்பி வந்து சோகமாக படுத்து விடுகிறது.

அவள் ஒரு சகலகலாவல்லி. பிறமொழி தேர்ச்சி, கற்பிக்கும் ஆற்றல், சங்கீத ஞானம், ஓவியம், தையல், பன்னமென எல்லாத் திறமையும் கொண்டிருந்தவள். கடந்த நான்கைந்து வருடங்களாக நோய்வாய்ப் பட்டபின் முற்றுமுழுதாகத் தன்னை ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொண்டாள். சிறு வயது முதலே இராம பக்தையான அவள் முப்பதாறு வகையான இராமாயண நூல்களைக் கற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி செய்து "மங்கள இராமாயணம்" என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பிரதியை வெளியிட்டிருக்கிறாள். இறுதிக் காலத்தில் தான் வைகுண்டம் செல்ல வேண்டும் என்ற உறுதியோடு நெறிவழி நின்று செயற்பட்டவள். தாயிடம் ஒன்றை மட்டும் அடிக்கடி கூறிக் கொள்வாள். "அம்மா எனக்கு கலியுகத்தில் வாழ இஷ்டமில்லை. இனி எனக்கு பிறப்பு வேண்டாம். நான் வைகுண்டம் போகும் தகுதியைப் பெற்றிருக்கிறேன் என நினைக்கிறேன். ஆனால் உங்களைப் போன்ற அன்புடைய நற்தாயின் பற்றை மட்டும் என்னால் அறுக்க முடியாமல் இருக் கின்றது. அதற்கும் என் பிரபு இராமர் வழிவிடுவார் என்று ஞானி மாதிரிப் பேசி எங்களை குமுற வைத்திருக்கிறாள். கொடிய நோயின் தாக்கத்தை கூட ஒரு இளம்பெண்ணாக இருந்து தாங்க முடியா விட்டாலும் தன் கர்மாவைத் தொலைக்கத் தான் கடவுள் இந்த நோயைத் தந்திருக்கிறான். வைகுண்டப் பதவி பெற வேண்டு மானால் நான் இந்த வலிகளைத் தாங்க வேண்டும் என பொறுமை யோடு சகித்துக் கொண்ட பூமாதேவி அவள். ஒரு தெய்வீகப் பிள்ளை யோடு சிறிது காலமாவது வாழ்ந்தோம் என்று பெருமைகொண்டாலும் எங்கள் குலக் கொழுந்தின் பிரிவை சாதாரண மனிதராகிய எங்களால் தாங்கமுடியாது. எங்கள் குலக் கண்மணி என்றும் எங்களுடன் இருக்கிறாள் என்ற திருப்தியோடு...

அவளைப் பெற்றெடுக்காத
அன்னையர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வில் வசந்தமென வந்த என் ப்ரிய சகியே...

எங்கே சென்றாய் என் பிரியமான தோழி
இருபத்தைந்து கால நட்பென்றாய்
ஏன் என்னை மட்டும் தனிக்க விட்டுச் சென்றாய்.
தனியனாய் நின் முகம் காணாது நலிந்த வேளையில்
இனியவளாய் என் கனவிலாவது வந்து செல்வாயா?
மனிதனாய் நின்றாய் மணிக்கணக்கில்
தொலைபேசியில் தொடர்ந்த எம் உரையாடல்
இனி எங்கே எப்போதாவதென்று சொல்லாயோ...
உன்னை தீண்ட வரும் விஷஜந்துக்கு கூட
தீங்கு செய்ததில்லை நீ
உன்னை காலன் ஏன் தீண்டிச் சென்றானோ...
இறப்பும் பிறப்பும் இறைவன் உரிமை என்பாய்
எவ்வுயிரையும் கொல்லும் உரிமை எமக்கில்லை என்பாய்
அரங்கனடி காண்பதே வாழ்வின் இலட்சியமென்றாய்
அறத்தோடு வாழ்ந்தே அகிலத்தில் நின்றாய்
வசந்தம் வருமென்று காத்திருந்தாய் அதுவே
உன் வாழ்வில் வானவில்லாய் மாறிச் சென்றதோ...
கசந்த வாழ்க்கைக்கு அர்த்தம் சொன்னாய்
உன் வாழ்வின் களிப்பை இராமனில் கண்டாய்
முகஅலங்காரம், தலையலங்காரம், உடையலங்காரம்
உனக்கே தனித்துவமானது உன்னால் அது உன்னதமானது
அகத்தில் ஒளிரும் வஞ்சகமில்லா சிரிப்பு மட்டும்
உன்னிடம் இருப்பதல்ல உன் முகமெனத்
துலங்கும் வஞ்சகமில்லா மனமும் தான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வாழ்க்கைக்கு அர்த்தம் தந்தவள் நீ
என் வாழ்வின் உயிர் மூச்சானவள் நீ
என் கண்ணில் ஒளியானவள் நீ
என் கண்ணின் மணியாய் நின்றவளும் நீ

நான் வரைந்த முதல் கவிதைக்கு சொந்தக்காரி நீ
நான் வரையா கவிதைக்கும் முடிவுரையும் நீயே....

என்றும் ப்ரியமான
பிரியாத்தோழி
ர.சிவநந்தினி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகளந்த உத்தமி
## என் அன்புத் தங்கை புவனகிறீஷா

"பிரசாதம்" என்பது இறைவனின் அருள்பெற்று இறைவனால் எமக்குக் கொடுக்கப்படுவதும், நாம் அன்போடு இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுவதும் பிரசாதம் எனப்படும். அப்படி இறைவனால் எமக்குக் கொடுக்கப்பட்டு இன்று அருள் பிரசாதமாக இறைவனடி சேர்ந்தவரே எமது "புவனகிறீஷா" எனக்கு ஒன்றுவிட்ட சகோதரி யான அவள். அவளுடைய மூன்று வயதிலே எமக்கு வீட்டிற்கு மிக அருகில் வீடுகட்டிக் குடியிருக்க பெற்றோருடன்( எமது சித்தப்பா, சித்தி) வந்தார்கள். அப்பொழுது சிறுகுழந்தையாக இருந்த அவள் மிக அதிகாலைப் பொழுதிலேயே எமது வீட்டிற்கு தளிர் நடை நடந்து தத்தித் தத்தி வந்துவிடுவாள். இரு வீட்டிற்குமிடையில் மிகப் பெரிய வாய்க்கால் வரம்பு அதையும் தாண்டி வந்துவிடுவாள். உலகளந்த உத்தமன் பேர் பாடிய உத்தமிதான் அன்று வரம்பு கடந்து வந்தனளோ என்று இன்று எண்ணத் தோன்றுகிறது.

அதன்பின் பத்து வருட காலம் அவர்களுக்கு அருகிலேயே இருந்தோம், அப்போது அவளுடைய சுட்டித்தனமும், குறும்புப் பேச்சுக்களும் எங்களுக்கு ஒரு பிருந்தாவனத்தில் வாழ்ந்த அனுபவத்தையே கொடுத்தது என்றால் மிகையாகாது. துடுக்குப் பேச்சிலும் நிறைந்த புத்திசாலித்தனமும், அவளுக்குள் இருந்த ஆளுமையையும் கண்டு பல தடவை வியந்திருக்கிறேன். அது மட்டுமல்ல, சமீபகாலத்தில் அவளுக்குள் இருந்த பல திறமைகளைக் கண்டும், கேள்வியுற்றுமிருக்கிறேன். பட்டமரத்தையே படிகமாக்க நினைக்கும் தற்காலத்தில், ஒரு பளிங்குக் கல்லை பட்டை தீட்டி வைரமாக்கத் தவறி விட்டோமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

அதன்பின் காலச்சூழ்நிலையால் அவர்களை விட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்தாலும் இடையிடையே சந்திக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. அப்பொழுது முற்றிலும் மாறுபட்ட கிறீஷாவையே காணக்கூடியதாக இருந்தது. அன்று அவளுடைய சந்திர வதனத்தில் என்றும் துள்ளி விளையாடும் கயல்விழிகளில் இன்று ஒரு ஞான தீட்சண்யம் ஒளிர்விட்டதையும், அந்த நிர்மலமான அமைதி தவழ்ந்த முகத்தில் தீர்க்கமான தெளிவும், அத்தெளிவினை ஆனந்தமாக ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக இதழ்க் கடையோரமாகத் தவழ்ந்த புன்னகை இவை யாவும் அவளின் ஞானத் தெளிவினை உணர்த்தின. மற்றவர்களின் உணர்வையும், தேவைகளையும் புரிந்து கொண்டு உதவி புரியும் பண்பு, தொட்டுத் தொடர்பு கொள்ளக் கூடிய பல தொடர்பு சாதனங்கள் பல இருந்தும், உறவுகளைத் தொடர்பு கொள்ளத் தயங்கும் இன்றைய தலைமுறையினருக்கு மத்தியில் அவள் ஒரு விதி விலக்காகவே காணப்பட்டாள். பல தடவை எங்களைத் தொடர்பு கொண்டு நலம் விசாரிப்பதும், அச்சந்தர்ப்ப சூழ் நிலைகளில் எடுத்து விட்டால் பின்தொடர்பு கொள்கிறேன் என்று கூறித் தொடர்பினைத் துண்டித்து விடும் பண்பும்... இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

உலக மாயையில் சிக்கித் தவிக்கும் எங்களுக்கு, அவளுக்கு இருந்த மனப்பக்குவத்தையும், தெளிவினையும் கண்டு பல தடவை வியந்திருக்கிறேன். எங்கள் குலதெய்வம் புவனேஷ்வரித் தாயால் எமக்கு நிவேதனமாகக் கொடுக்கப்பட்ட அவர் மாயச் சாக்கடையில் உழன்று தவிக்காமல் அன்றலர்ந்த மலராக எம்முடன் சில காலமே வாழ்ந்தாலும், ராமபிரானிடம் அநுமன் பெற்ற அருட்பிரவாகத்தைப் போல் நாமும் அவரிடம் சிறிதளவேனும் ஞானப்பிரவாகத்தைப் பெற்றுக் கொண்டோம் என்பதே நிதர்சனம். அவ்வருட்பிரவாகம் இன்று "இறையடியில்" ஞானப்பிரசாதமாக!

ஓம் சாந்தி.!

**அன்பான அக்கா**

**லோகநாதன் உமாநந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிருந்தாவனத்தின் பொக்கிஷமாய் ஒளிரும் எங்கள் கிறீஷா அக்கா

நாம் சிலருடன் குறுகிய காலம் பழகினாலும் அவர்களின் நல்ல குணத்தையும் சுத்தமான உள்ளத்தையும் இலகுவாக புரிந்து கொள்ள முடியும். கிறீஷா அக்காவுடன் நான் கொஞ்ச காலம்தான் பழகி இருந்தாலும் அவரைப் பற்றி என்னால் நிறைய பேசமுடியும். நல்ல மனம், எல்லாரும் நன்றாய் இருக்க வேண்டும் என்ற எண்ணம், கனிவான பேச்சு போன்ற நற்பண்புகள் அவரிடம் தாராளமாகவே இருந்தது.

எனக்கு பதினாறு வயது இருக்கும் போது கிறீஷா அக்கா யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வந்து எங்கள் வீட்டில் ஒரு வாரம் தங்கி இருந்தார். அப்பொழுதுதான் எனக்கு அவரிடம் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரின் நல்ல குணத்தை அவரின் செயல்களிலும் பேச்சிலும் நான் அப்பொழுதே அறிந்து கொண்டேன்.

எங்கள் அப்பப்பாவுக்கு அவரை மிகவும் பிடிக்கும் என கேள்விப்பட்டிருக்கிறேன். எங்கள் குடும்பத்தில் கிறீஷா அக்கா மீது எல்லோருக்கும் ஒரு தனிப் பாசமுண்டு. கிறீஷா அக்கா தனக்குள் நிறையத் திறமைகளை வைத்திருந்தார். நன்றாகப் பாடுவார். அழகான ஓவியங்களை வரைவார். ஜோதிடத்தைப் பற்றி நிறைய விடயங்களைத் தெரிந்து வைத்திருந்தார். இராமாயணத்தை பற்றி யாருக்கும் தெரியாத விடயங்களை நூல்களை வாசித்து தெரிந்து கொண்டார். தனக்கு தெரிந்த விடயங்களை அவர் ஒரு புத்தகமாகத் தொகுக்க ஆசைப்பட்டார். அந்த செயலில் அவர் முழுமனதாக ஈடுபட்டிருந்தார். அந்த புத்தகம் ஒரு பொக்கிசமாக இருக்கும் என நம்புகிறேன். இந்த தொகுப்பை அவரால் முடிக்க முடியாமல் இருந்தாலும் அவர் இது வரை எழுதிய பகுதிகளை வாசித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் எங்கள் எல்லோருக்கும் இராமாயணத்தை பற்றி பல விடயங்களை அறிந்து கொள்ள முடியும் என நம்புகிறேன்.

தான் நோயுற்றிருக்கும் பொழுது கூட தனது சொந்த பந்தங்களின் நலனை விசாரித்து அவர்களின் விசேட தினத்துக்கு அவர்களுக்கு வாழ்த்தும் தெரிவிக்கும் பெருந்தன்மை கொண்டவர் நம் கிறீஷா அக்கா. இப்படிப்பட்ட ஒருவர் எனக்கு சகோதரியாகக் கிடைத்ததை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

அவர் இராமரை முழுமுதல் கடவுளாக வணங்கினார். அவரின் ஆத்மா வைகுண்டத்துக்கு சென்று இராமனிடம் நிச்சயமாக சேர்ந்திருக்குமென நாம் எல்லோரும் நம்புகின்றோம்.

அன்பான சகோதரன்
ஸ்ரீ.ஜதுநந்தனன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்!

"சித்தப்பா - நான் கிரிஷா
எனது புதிய தொலைபேசி இலக்கம் ..."

எனது கையடக்கத் தொலைபேசியின் வட்ஸ்அப் பக்கத்தில் இந்த வார்த்தைகள் இன்னமும் பதிவில் இருக்கின்றன. ஆனால் பதிவுக்குரியவர் இன்று இவ்வுலகில் இல்லை என்பது என்னை பெரிதும் மனவேதனைக்கு உட்படுத்திவிட்டது.

மின்னாமல் முழங்காமல் மழை வரும் என்று சொல்வது போல, இந்த துயரமான நிகழ்வு நடந்து முடிந்து விட்டது. நம்ப முடியவில்லை! ஆனால் உண்மை! மலர்ந்து மணம் வீச வேண்டிய ஒரு மலர், இடைநடுவில் வாடிக் கருகிவிட்டது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

செல்வி கிரிஷா கௌரிகாந்தன் என்ற பெயருக்குரிய பிள்ளையின் குடும்பத்தினர் எனது உறவினர் என்பதற்கும் மேலாக, அவர்களுடன் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு எனக்குண்டு. பிள்ளை கிரிஷாவுக்கு என்னுடன் பேசுவதில் அலாதி பிரியம்! நேரில் சந்திக்கும் போதெல்லாம் ஆன்மீக, சமய விஷயங்களைப் பற்றியெல்லாம் கலந்துரையாடுவார். தேவாரம் மற்றும் பக்திப் பாடல்கள் அடங்கிய நூல்களையும், சமய சஞ்சிகைகளையும் என்னிடமிருந்து பெற்று வாசிப்பது வழக்கம். சமய விஷயங்களைப் பற்றி பேசுவதற்கும், அறிந்து கொள்வதற்கும் அடிக்கடி தங்கள் வீட்டுக்கு வாருங்கள் என கேட்டுக் கொள்வார்.

கொரோனா கிருமித் தொற்று பிரச்சினைக்குப் பின்னர் பிள்ளையை நேரில் சந்திப்பதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனது வட்ஸ்அப் ஊடாக செய்திப் பத்திரிகைகளை (E-Paper) அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளேன்.

பிள்ளையின் சிறுவயதுப் பருவத்தில் கணவனை இழந்து, இப்போது பிள்ளையையும் இழந்து தனித்திருக்கும் ஒரு தாயின் இதயம், எவ்வாறெல்லாம் வேதனைப்படும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. என் செய்வது? - இது இறைவன் வகுத்த நியதி என சொல்வதைத் தவிர, வேறு எதுவுமே தெரியவில்லை!

பிள்ளையின் ஆத்ம சாந்திக்கு இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

– ஊரெழு அ. கனகசூரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னகை பூத்த முகம்

எமது மருமகள் புவன கிறீஷாவின் மறைவினை நினைக்கும் தோறும் ஏக்கமும் கண்கள் கலங்குகின்ற ஓர் பெருந்துயரம்தான் ஏற்படுகின்றது. பெற்றோருக்கு அருந்தவப் புதல்வியாய்ப் பிறந்தாள். கண்ணும் கருத்துமாகப் பொத்திப் பொத்தி வளர்க்கப்பட்டு அருமை பெருமையாகச் செல்வச் செழிப்புடன் வாழந்த பிள்ளைக்கு நிறைவான வாழ்வொன்றும் கிடைக்கவில்லை என்பது குடும்பத் தலைவர் அனைவருக்கும் மிகப் பெரிய கவலை. இறுதியாக அவரைப் பீடித்த கொடிய நோய்க்காக போராடியும் பலன் கிடைக்கவில்லை. விதி வென்றுவிட்டது ஆறாத துயரம் எமக்கு.

புவனகிறீஷா பிறந்து இரண்டு வயது வரையும் தன் அப்பப்பா வீட்டிலேயே வளர்ந்து வந்தாள். குறைமாதப் பிள்ளையாகப் பிறந்தபடியால் அவளது அப்பப்பா முதற் கொண்டு எல்லோரும் அவளை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டோம். அவள் நடந்து பழகுவதற்கு மூன்று சில்லு வண்டி ஒன்று இருந்தது. எனது கணவர் விடுமுறைக்கு இங்கு வரும் காலங்களில் கிறீசா சரியாக நடந்து பழகுவதற்கு அவ்வண்டி மூலம் பயிற்சி கொடுப்பார். இன்று அவை எல்லாம் என் நினைவுக்கு வந்து போகின்றன.

நாம் சிறிது காலம் வெளிமாவட்டங்களில் இருந்தபடியால் கிறீஷாவின் பள்ளிப் பருவத் தோற்றம் இயல்பு ஒன்றையும் அறிய முடியவில்லை. ஆனால் கல்வி பொதுத் தராதர உயர்தர வகுப்பு சங்கீதப் பாட பரீட்சை பயிற்சிக்காகப் பேராதனைக்கு வந்திருந்தாள். நீண்ட நாட்களின் பின் வந்த அவளது அழகான இளமைத் தோற்றம் பார்க்க சந்தோசமாக இருந்தது மனதிலும் பதிந்து விட்டது. அங்கு வந்து என்னிடம் பயிற்சி பெற்றபோதுதான் அவளது பாடும் திறமையை அறிந்து கொண்டேன். மீண்டும் நிரந்தரமாக யாழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்தில் இருக்க வந்தபொழுது கிறீஷாவுடன் நெருங்கி பழகுகின்ற வாய்பு கிடைத்தது. இளமைப் பருவத்தில் வனப்புமிக்கவளாகவும் கவர்ச்சிமிக்கவளாகவும் விளங்கினாள். அவளுடைய தோற்றத்தைப் பார்த்து இந்திராகாந்தி போன்று இருக்கிறாள் என்று சொல்வதை கேட்டறிந்தோம் உண்மையும்தான். புன்னகைபூத்த முகம் அப்புன்னகையில் எத்தனையோ அர்த்தங்கள் புரியும். அகன்ற நீண்ட விழிகளும் சிரிக்கும்.

அந்தப் புன்னகை அரசிக்கு நாம் இயல்பான சிரிப்போடு பார்த்தாலும் "ஏன் சிரிக்கிறீர்கள், ஏன் சிரிக்கிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டே இருப்பாள் அது புரியவில்லை. எவரையும் ஆழமாகப் பார்த்து இடைபோட்டுக்கொள்வாள். சிந்தித்து செயலாற்றுவாள். தன் அப்பாவைப் போன்று அளவோடுதான் பழகுவாள். பேசுவாள். ஜீவகாருண்யம் நிறைந்தவள். தனக்குப் பிடிக்காத செயல்களைப் பார்த்து கோபமும் கொள்ளுவாள். இவை யாவும் அவளிடம் காணப்பட்ட குணவியல்புகள். குடத்துள் எரியும் விளக்காக எத்தனையோ திறமைகள் அவளிடம் மறைந்திருந்தன. சோதிடம் பார்ப்பது, சித்திரம் வரைவது, பாடுகின்ற திறமை. அவள் ஒரு விஷ்ணு பக்தை. இராமரிடமும் அளவில்லா பிரியம். வீட்டில் வைத்திருக்கும் விதம் விதமான இராமர் சிலைகள், இராமாயணப் புத்தகங்கள், ராம், ராம் ஸ்ரீராம் என்று எழுதப்பட்ட (2001 முதல் இற்றை வரை) பயிற்சிக் கொப்பிகள் இராமரைப் பற்றி சொல்லும் அவளது நாளாந்தக் கதைகள் அவள் இராமரிடம் வைத்திருந்த பக்தியினைக் காட்டுகின்றன.

இவையெல்லாம் இருந்தும் கொடிய நோய் வந்து அவளது பூரண வாழ்வை நிறைவு செய்ய முடியாமல் கொன்றுவிட்டது என்பதே ஆற்றமுடியாத துன்பம். இறுதி மூச்சு நிற்கும் தருவாயில் சிறிது சிரமம் இருந்தாலும் மிகவும் அமைதியாக புன்னகை பூத்த முகத்துடனேயே அவளது உயிர் பிரிந்தது. நான் இராமருடைய பாத விந்தரங்களையே கெட்டியாகப் பிடித்து விட்டேன் என்ற ஆனந்தமே அவளது இறுதிப் புன்னகை உணர்த்திற்று. அமைதியானோம்.

பிரிவால் துயருறும்
மாமிமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை பெற்றுச் சென்ற தோழிக்கு

மலைச்சாரலில் பைன் மரங்களுக்குள்
ஒளிந்திருக்கும் பனித்துளியைப் போல்
என் கூடுகளுக்குள் உன் இருப்பு
வானத்தை மேகம் கழுவிக் கொண்ட
நிர்மலமான காலைப் பொழுதொன்றில் உன் கதைக்கான
முடிவினை காலதேவன் வைத்துச் சென்றான்.
என் இடது மணிக்கட்டில் பல்லி விழுந்தபோது கூட
நான் எண்ணியிருக்கவில்லை உன் மரணத்தை
சர்ப்பத்தின் வாய்க்குள் அகப்பட்ட தேரையைப்போல்
நொடிப் பொழுதில் எல்லாமே முடிவுக்கு வந்தன.
சாக்குருவியின் இரவுப்பாடலை அடிக்கடி நீ
கேட்பதாக கூறும் போதெல்லாம்
வலிந்த கதைகளை அடிக்கடி நீ புனைவதை
உனக்கு ஞாபகப்படுத்தியதை எண்ணி
மனங் கலங்குகிறது
திறந்த அறைக்குள் வானம் கவிழ்ந்திருந்த வேளையில்
பிடுங்கி எறியப்பட்ட கொடியாய் உன்னை காலம் சபித்திருந்தது.
முடிக்கப்படாத அத்தியாயங்களுடன்
எம்மில் இருந்து விடைபெற்றாய்
வலியின் பிடியில் நிலைகுத்தி நின்ற உன் விழிகள்
சொல்லமுடியாத கதைகளைக் கூறிச்சென்றன
உனக்கு பிடிகாது எனத் தெரிந்திருந்தும்
புவன கிறீஷா என்று உன் முழுப்பெயர் கூறி
அழைத்தபோதிலும் நீ வரப்போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் இறுதி கணத்தில் ஞாபக அடுக்குகளுக்குள்
இன்றும் என்னுள் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்
நீயோ புள்ளியாய் தேய்ந்து மறைகிறாய்
பாலையின் குளிர்நிலவில் உன் நினைவுகளைப்
பத்திரப்படுத்த முயன்றும் தோற்றுப் போய்
காலத்தை சபித்தபடி கரைகிறது எனது காலம்

– சி.ரமேஷ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக் குறிப்பேட்டிலிருந்து...

1. பெயர்: கௌரிகாந்தன் புவனகிறீக்ஷா

2. விரும்பிய பெயர்: லதாங்கி

3. பிறப்பு: 1979.08.13

4. கல்வி :

முன்பள்ளி : ஏழாலை மேற்கு சரவணா முன்பள்ளி

ஆரம்ப கல்வி : ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை

உயர் கல்வி : யா/உடுவில் மகளிர் கல்லூரி

இடப் பெயர்வு : யா/இளவாலை ஹென்றிஸ் கல்லூரி (புனித ஹென்றீ கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய புனித பெருமகன் அருட்தந்தை ஜோசப் அந்தோனிப்பிள்ளை ஜேசுதாஸ் அவர்களின் ஆசியைப் பெற்றவர்)

யா/காரைநகர் இந்துக் கல்லூரி (1995-96)

யா/தொழினுட்ப கல்லூரி National Cerificate of marketing two years course

IT Park : Computer

5. ஏனைய தகமை : சங்கீதம் -3rd Grade

சிங்களம் - வாசித்தல், எழுதுதல், கதைத்தல்

தையல், பன்னவேலை, சித்திரம், சோதிடம் பார்த்தல்

6. தொழில் : ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க முன்பள்ளி தொடக்க ஆசிரியர் 2004

கோட்டைக்காடு தமிழ் கலவன் பாடசாலை

மல்லாகம் கனிஷ்ட மகாவித்தியாலயம் - பகுதி நேர ஆங்கில ஆசிரியை

தனியார் கல்வி நிலையம் வினைல்ஸ் - வரலாறு, சைவ சமயம்

மற்றும் 5 ஆம் ஆண்டு புலமை, சிங்களம் ஆசிரியை

Union Assurance சுன்னாகம் Adviser (2012-17)

❖ Brilliant Starter Award (Batch /November /2013)

7. பொழுது போக்கு : வீட்டுத் தோட்டம் - சேதன பசளை மூலிகைத் தோட்டம், மூலிகை , வடகம் தயாரிப்பு மற்றும் பூந்தோட்டம்


செல்லப்பிராணி வளர்ப்பு : நாய் (லக்கி, Browin) பசு (லஷ்மி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆன்மீகம் : இராமாயணம் மீளாய்வு,
பகவத்கீதை பாராயணம் செய்தல்,
கருடபுராணம் மீள்வாசிப்பு

எழுத்தாக்கம் : இராமாயணம் பாலகாண்டம்,
அயோத்தியா காண்டம் (முற்றுப் பெறவில்லை)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க முன்பள்ளி தொடக்க ஆசிரியராக கடமையாற்றிய போது




Union Assurance Awarding function



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Brilliant Starter

## UNION ASSURANCE PLC

G. Buwanagreesha

is certified for having successfully completed

all the criteria to be recognized as a

Brilliant Starter of Union Assurance PLC

Batch / November / 2013

Assistant General Manager
Learning and Development and Special Projects

05th June 2014
Date

BRILLIANT STARTER

union assurance
Trust in your tomorrow, today.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

union assurance
Trust in your tomorrow, today.

# Group Term Life Assurance Scheme

## For

## Life Insurance Advisors

**This is to certify that**

**BUWANAGREESHA, G. (MISS.)**

**Code No.DA2249**

**is covered under the Policy No. UG - 74**
**for the following benefits**

- **Life Cover** : Rs 271515/-
  Death due to any cause
- **Critical Illness Cover** : Rs 135757/-
  On the first instance of diagnosis or surgery of any of the 23 critical illness mentioned overleaf
- **Personal Accident Cover** : Rs 271515/-

(This certificate cancels any previous certificates issued)

30.04.2015

**Authorized Signature**
Sudarshanie Galappaththi
Manager - Life



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org